விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 032 வள்ளுவர் ஆண்டு 2056 தை 07 திங்கட்கிழமை (20.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்.குருநகரில் மினி சூறாவளி

### மூவர் காயம்; 222 பேர் பாதிப்பு



(குருநகர்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் நேற்று வீசிய மினி சூறாவளி காரணமாக மூவர் காயமடைந்துள்ளனர் என யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருநகர் ஜே 68 மற்றும் ஜே 69 கிராம சேவையாளர்பிரிவுகளில் 49 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களில் மூவர் காயமடைந்துள்ள 15

## வடக்கில் இடம்பெறும்
## குற்றச்செயல்களுடன் இராணுவத்துக்கு தொடர்பு

### படை முகாம்களை உடன் அகற்றுக

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இடம்பெறும் கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் இராணுவத்துக்குத் தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே வட மாகாணத்திலிருந்து உடனடியாக இராணுவத்தை 15

## பொலிஸ் காவலில் இருந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

### பிரேத பரிசோதனைக்கு உத்தரவு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் அவரது உடலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து முழுமையான பிரேத பரிசோதனை மேற் 16

## தடை செய்யப்பட்ட
# பிரமிட் முறையில்
# யாழில் நிதி மோசடி

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கியினால் தடை செய்யப்பட்ட பிரமிட் முறையிலான நிதி நடவடிக்கைகளில் சில நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண
## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கடும் மழையுடனான வானிலை காரணமாகக் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப் 16

## நீதிமன்றுக்கு முன்பாக நடந்த இரட்டைக் கொலை

### கூலிக்கு அமர்த்தப்பட்டோம்

### கைதானவர்கள் வாக்குமூலம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட நீதிமன்றுக்கு முன்பாக இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் மற்றும் அடம்பனில் ஒருவரை சுட்டுக்கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொருவர் என மூன்று பேரையும் 02

## மன்னார் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்
## இராணுவச் சிப்பாய் உட்பட மூவர் கைது

### உறுதிப்படுத்தியது பொலிஸ் ஊடகப்பிரிவு

(மன்னார்)

மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை இராணுவத்தில் பணியாற்றும் ஒரு சிப்பாய் உட்பட மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்என பொலிஸ் 15

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பரிந்துரைத்த மின்கட்டணக் குறைப்பை அமுல்படுத்துங்கள்

### இல்லையேல் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளித்த 20 சதவீத மின்கட்டணக் குறைப்பை முறையாக அமுல்படுத்த வேண்டும். சட்டத்தின் பிரகாரமே ஆணைக்குழு மின் கட்டணத்தைக் குறைத்துள்ளது. ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு எதிராக மின்சார சபை செயற்பட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நாட்டுப் பிரஜைகளுக்கு உண்டு என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி 15



## நெற் கொள்வனவின்போது விவசாயிகளிடம் மோசடி

### பரந்தனில் அரங்கேறிய சம்பவம்

(பரந்தன்)

பெரும்போக நெற்செய்கையானது காலம் தவறியமை, நோய்த்தாக்கம் உள்ளிட்ட பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும்போது, நிறையில் மோசடிச் சம்பவம் ஒன்று நேற்றுப் பரந்தன் குமாரபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நெல்கொள்வன 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமிட் முறையி...

பிரமிட் நிதி நடைமுறைகளை இலங்கை மத்திய வங்கி தடை செய்துள்ள போதிலும் யாழ்ப்பாணத்தில் சில நிறுவனங்கள் ஏழை மக்களிடம் இலட்சக்கணக்கான ரூபாய்களை பிரமிட் முறையில் சேகரித்து மோசடியில் ஈடுபட்டு வருகின்றன.

ஏ,பி,சி என வைப்பாளர்களைப் பிரித்து அவர்கள் மூலமாக நிதி மோசடியில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் குறித்த சில நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறான நிதி நிறுவனங்கள் சட்டவிரோதமானவை என்பதுடன் நிதி மோசடியில் ஈடுபடுவதையே இவை குறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்றன.

எனவே இத்தகைய நிறுவனங்களின் போலிப் பிரசாரங்களை நம்ப வேண்டாம் என பொதுமக்களிடம் சமூக நலன் சார்ந்த அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் இதுவிடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தலையிட்டு உரிய நிறுவனங்களைத் தடைசெய்து அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்ற வேண்டும் எனவும் கேட்டுள்ளன. (ந-7)

## நீதிமன்றுக்கு...

தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க மன்னார் நீதவான் அனுமதியளித்து கட்டளையிட்டார்.

2022 ஆம் ஆண்டு இடம் பெற்ற இருதரப்பு முறுகலில் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இருவரின் சகோதரரினால் கூலிக்கு அமர்த்தப்பட்டு கொலை செய்ததாக மூவரும் வாக்குமூலமளித்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.20 மணியளவில் மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்புள்ள கோட்டை வீதியில் வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

2022ஆம் ஆண்டு உயிலங்குளம் - நொச்சிக்குளம் பகுதியில் இருதரப்பினருக்கு இடையிலான மோதலில் சகோதரர்கள் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். அதே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட பலர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு முன்னிலையாக வருகை தந்த போதே அவர்களை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பித்தனர்.

சம்பவத்தில் நொச்சிக்குளத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர். பெண் உட்பட இருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் பேசாலையில் வைத்து இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று நேற்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய நபர் உட்பட இருவர் நேற்று முன்தினம் தென்னிலங்கையில் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் கடந்த ஆண்டு அடம்பனில் வைத்து ஒருவரை சுட்டுக்கொன்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்.

அந்தக் கொலையும் நீதிமன்றுக்கு முன்பான கொலையும் சகோதரர்களின் கொலைக்கு பழிதீர்க்கும் சம்பவம் எனக் கைது செய்யப்பட்டவர்கள் வாக்குமூலமளித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் மன்னார் நீதவான் நீதிமன்றில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர். பொலிஸ் காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸார் விண்ணப்பம் செய்தனர். அதனை ஆராய்ந்த நீதவான்,இன்று வரை மூவரையும் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதியளித்துக் கட்டளை வழங்கினார். (ந-7,33)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை மனைப் பொருளியல் ஆசிரியர் **திருமதி மொனிக்கா றொமேஸ்** அவர்களின் அன்புத் தந்தையார்

**சந்தியாப்பிள்ளை மரியதாஸ்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயர்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3073)

பாடசாலைச் சமூகம்
யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை


### உள்ளூர் உற்பத்தியாளர்களின்
## விற்பனைக்கூடம் யாழில் இன்று அங்குரார்ப்பணம்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாண முயற்சியாளர் சங்கத்தால் நடாத்தப்படும் பஞ்சவர்ணம் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான புதிய விற்பனைக் கூடம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள் கலந்து கொண்டு குறித்த விற்பனைக் கூடத்தைத் திறந்து வைக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ந-7)


# மரண அறிவித்தல்

பிறப்பு 09 - 04 - 1941



இறப்பு 19 - 01 - 2025

## பசுபதி சந்திரசேகரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை)

நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி சந்திரசேகரம் அவர்கள் நேற்று 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நெடுந்தீவைச் சேர்ந்த பசுபதி - அன்னா தம்புதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த முருகேசு - பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் விக்கினேஸ்வரி(ஓய்வுநிலை ஆசிரியை - சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் இராமச்சந்திரன், லீவாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிறிஸ்ரி கபிலன்(ஐக்கிய இராச்சியம்), மிதிலன்(அவுஸ்திரேலியா), சகிலா(ஆசிரியை - யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), சஞ்சுகன்(ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வித்தியா, அலிசன், வலன்ரைன் தினேஸ்(தொழில்நுட்பவியல் கல்லூரி - கொக்குவில்), அனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருத்திக், கிரிசன், சார்லட் தமிழினி, கிறிஸ்ரி கவினன், காவியா, கேசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நுணாவில் மேற்கு, சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் நாளை 21.01.2025 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ். வீதி, 1ம் ஒழுங்கை,
(நுணாவில் பொது நூலகம் முன்பாக)
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

(3074)

தகவல்: குடும்பத்தினர்
0776728386, 0778477840



# வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல குளிர்பான நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை

- Quality Controller (Qualification - Food Science) (பெண்)
- காசாளர் (பெண்)
- தொழிற்சாலை உதவியாளர் (பெண்)
- அலுவலக உதவியாளர் (பெண் - Excel தெரிந்தவர்)

(3072)

**076 531 1410**
(9.00 a.m - 5.30 p.m தொடர்புகொள்ளவும்)

340 c, பொன்னம்பலம் வீதி,
யாழ்ப்பாணம்.



# மரண அறிவித்தல்

## திருமதி சதாசிவம் பரமேஸ்வரி



மலர்வு 21.11.1952 உதிர்வு 18.01.2025

மாசேரியைப் பிறப்பிடமாகவும் வரணி வடக்கை வதிவிடமாகவும் (தம்பன்) கொண்ட திருமதி சதாசிவம் பரமேஸ்வரி அவர்கள் 18.01.2025 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகப்பன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சதாசிவம்(சபா, முன்னாள் குட்லக் கோட்டல் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் தயாளன் (லண்டன்), றமணன்(பிரான்ஸ்), வாகீசன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நிஷாந்தி(லண்டன்), தர்சினி(பிரான்ஸ்), பவிதா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரிஷாந், ஆதனா, அருண், அருணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காங்கேசு(அமரர்), இராசலட்சுமி, கந்தசாமி, நடராசா, செல்வநாயகம், செல்வராசா, ஸ்ரீபாலகிருஷ்ணபிள்ளை(ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடேசு(அமரர்), கிருஷ்னன், பொன்னம்மா, இராசம்மா(அமரர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2025) திங்கட்கிழமை மு.ப 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வரணி வடக்கு, வரணி.

(C-2088)

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளை

## புத்தாண்டு தினத்திலாவது விடுவியுங்கள்

### இல்லாவிட்டால் அறவழிப் போராட்டத்தில் குதிப்போம் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை



(கரணவாய்)

**சித்திரைப் புத்தாண்டிலாவது தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால், வடக்கு கிழக்கை ஸ்தம்பிக்க வைக்கக்கூடிய ஒரு அறவழி போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள மகஜருக்கான கையெழுத்து வேட்டை நேற்று முன்தினம் சனிக்கிழமை நெல்லியடியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் தொடர்ந்து ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாமல் காணப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷ காலம் தொடக்கம் இன்றுவரை அது நீண்டுகொண்டே இருக்கின்றது.

மைத்திரி, ரணில், சஜித் என எல்லோருமே தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது வேதனைக்குரிய விடயம்.

இலங்கை வரலாற்றில் ஆயுதப் புரட்சியை ஏற்படுத்திய ஜே.வி.பியினருக்கு இரு தடவைகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

இதனால் தான் இன்று அவர்கள் ஆட்சிபீடம் ஏறியிருக்கின்றார்கள்.

தமிழ் அரசியல் கைதிகளில் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும். தண்டனை விதிக்கப்படாதவர்கள் வழக்குகளிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டும். அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு தயங்குகிறது. சிங்கள மக்கள் கொந்தளிப்பார்கள் என பயப்படுகிறது.

எதிர்வரும் சித்திரை புத்தாண்டிலாவது அவர்கள் விடுவிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால், தமிழ் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் இணைந்து வடக்கு, கிழக்கு முழுவதும் சிவில் நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்கக்கூடிய ஒரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8-60)

# கந்தர பகுதியில் பேருந்து விபத்து

## 58 பேர் காயம்

(மாத்தறை)

மாத்தறை - கந்தர - தலல்ல பகுதியில் இடம் பெற்ற விபத்தில் சுமார் 58 பேர் வரை காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் கந்தர மற்றும் மாத்தறை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)



## குருநகர் பகுதியில்

# காற்றினால் தூக்கி வீசப்பட்ட கூரைகள்





(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகரில் நேற்றுக் காலை 6.45 மணியளவில் வீசிய பலத்த காற்றினால் கொலை விலக்கி மாதா ஆலயம் மற்றும் பல வீடுகளின் கூரை கள் தூக்கி வீசப்பட்டு சேத மடைந்துள்ளன.

இந்த அனர்த்தத்தால் முப்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதி அளவிலும் புனித கொலை விலக்கி மாதா ஆலய திருப் பண்ட அறைகள் முற்றாகவும் சேதமடைந்துள்ளன.

அத்தோடு சில படகுகளும் பகுதி அளவில் சேதமாகியுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர். (நி-8)

# இலங்கை வருகிறார்

## பிரித்தானிய, இந்தோ-பசுபிக் செயலர்



(கொழும்பு)

பிரித்தானியாவின் இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கான வெளியுறவுச் செயலர் கத்தரின் வெஸ்ட் இரண்டு நாள் உத்தியோகபூர்வமான விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வருகை தரும் அவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சில பிரதான அரசியல் கட்சிகளின் முக்கிய பிரமுகர்களையும் சந்திக்கவுள்ள அவர், சிவில் அமைப்புக்களின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

அதனையடுத்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, வட மாகாண ஆளுநர் வேதநாயகன், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ். வர்த்தக சங்கத்தினர் மற்றும் சிவில் தரப்பினர் உள்ளிட்டவர்களையும் சந்திக்கவுள்ளார்.

தொடர்ந்து யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ள தரைக்கீழ் நீர் மற்றும் கால நிலை மாற்றம் சம்பந்தமான நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார்.

பிரித்தானியாவின் ஆளும் தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான கத்தரின் வெஸ்ட் இலங்கை யுத்தத்தில் இழக்கப்பட்ட உயிர்களுக்கான நியாயமான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளதோடு கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் வெளிவிவகார அலுவலகத்தில் இந்தோ-பசுபிக் பிராந்திய செயலாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம்

## இந்திய பிரதமர் மோடி வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கலாசார மத்திய நிலையத்தின் பெயர் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டமையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் மோடி எக்ஸ் வலைத் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், யாழ்ப்பாணத்தில் இந்திய நிதியுதவியுடன் கட்டப்பட்ட கலாசார மையத்துக்கு திருவள்ளுவர் பெயர் சூட்டியதை வரவேற்கிறோம்.

**இது திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்துவதுடன்,** இந்தியா மற்றும் இலங்கை மக்களுக்கு இடையே உள்ள ஆழமான கலாசார, மொழியியல், வரலாறு மற்றும் நாகரீக பிணைப்புகளுக்கு சான்று என பதிவிட்டுள்ளார். (நி-8)

Narendra Modi @narendramodi · 12h
Welcome the naming of the iconic Cultural Center in Jaffna built with Indian assistance, as 'Thiruvalluvar Cultural Center'. In addition to paying homage to the great Thiruvalluvar, it is also a testament to the deep cultural, linguistic, historical and civilisational bonds between the people of India and Sri Lanka.

India in Sri Lanka @Indiain... · 22h
In honor of great Tamil poet-philosopher Thiruvalluvar, the Cultural Center in Jaffna was today renamed as 'Thiruvalluvar Cultural Center' in a ceremony attended by HC @santjha, Minister of Buddhasasana, Religious & Cultural Affairs Hon. Sunil Senevi & Governor Northern Province.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# 2025 ஐசிசி சம்பியன்ஸ் டிராபிக்கான இந்திய அணி அறிவிப்பு

எதிர்வரும் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடர் மற்றும் 2025 ஐசிசி சம்பியன்ஸ் டிராபிக்கான தனது அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மும்பை, வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பின் போது எதிர்வரும் தொடர்களுக்கான இந்திய அணி விபரம் அறிவிக்கப்பட்டது.இதில் இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா மற்றும் தலைமை தேர்வாளர் அஜித் அகர்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சம்பியன்ஸ் டிராபி மற்றும் இங்கிலாந்துடனான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான இந்திய அணிக்கு ரோஹித் சர்மா தலைவராக நியமிக்கப்பட்ட அதேநேரம் துணைத் தலைவராக சுப்மன் கில் நியமிக்கப்பட்டார்.



இந்த முடிவு, ஒரு தொடக்க ஆட்டக்காரராக அணியில் சுப்மன் கில்லின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது.

பெப்ரவரி 19 ஆம் திகதி தொடங்கும் சம்பியன்ஸ் டிராபிக்கான இந்திய அணியில் ரோஹித் சர்மா, சுப்மன் கில், யஷஸ்வி ஜெய்ஸ்வால், விராட் கோலி, ஸ்ரேயஸ் அய்யர், கே.எல்.ராகுல், ரிஷப் பந்த், ஹர்த்திக் பாண்டியா, அக்ஸர் படேல், குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா, வொஷிங்டன் சுந்தர், அர்ஷ்தீப் சிங், மொஹமட் ஷமி மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அதேநேரம், பெப்ரவரி 6 ஆம் திகதி தொடங்கும் இங்கிலாந்துடனான ஒருநாள் தொடரில் சம்பியன் டிராபிக்கான இந்திய அணியில் இடம்பிடித்த ஜஸ்பிரித் பும்ரா நீக்கப்பட்டு ஹர்ஷித் ராணா இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3287

### தனா




### சாளினி




### டினு




### யதுர்சன்




### மதுசன்




### கதிர்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவைத் தொடர்ந்து அநுர அமெரிக்கா விஜயம்

(கொழும்பு)
ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது அடுத்த வெளி நாட்டு விஜயமாக அமெரிக்கா செல்ல வுள்ளதாக விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்தா தெரிவித்துள் ளார்.

அதன் பின்னர் ஜனாதிபதி ஜப்பானுக் கான உத்தியோ கபூர்வ விஜயத்தை மேற்கொள்வார் என அவர் தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதியாக பதவி யேற்ற பிறகு, பிராந்திய வல்லரசு களான இந்தியா, மற்றும் சீனாவுக்கு விஜயம் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் அனைத்து நாடுகளுடனும் பொரு ளாதார மற்றும் கலா சார உறவுகளை மேம் படுத்தும் வகையில் இந்த விஜயங்கள் மேற்கொள்ளப்படு கின்றன என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# அலங்கார உற்சவம்

(கரணவாய்)
துன்னாலை வட க்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளி காம்பாள் தேவஸ்தான அலங் கார உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்ப மாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர் வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 28ஆம் திகதி செவ் வாய்க்கிழமை இர தோற்சவமும், 29 ஆம் திகதி புதன் கிழமை தீர்த்த உற் சவமும் நடைபெறவுள் ளது என ஆலய நிர் வாக சபையினர் அறி வித்துள்ளனர். (நி-8-60)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் இடம்பெற்ற இரத்ததான முகாம்



(சாவகச்சேரி)
"விதையனைத்தும் விருட்சமே" அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற் றுக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையின் இரத்த வங்கியில் இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட் டது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அண்மையில் இரத்த வங்கி ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் "விதை யனைத்தும் விருட்சமே" அமைப்பு, கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து மேற்படி இரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி இரத்ததான முகாமை சாவ கச்சேரி ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்தியர் ரஜீவ் சம்பி ரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத் தார்.

இதன்போது வைத்தியசாலைப் பணியாளர்கள் "விதையனைத்தும் விருட்சமே" அமைப்பினை சேர்ந்த தொண்டர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு குருதிக் கொடையை வழங்கியிருந்தனர். (நி-8-30)

# மனம் நெகிழ்ந்த இறுதி வணக்கம்!

தோன்றல் 15 . 11 . 1931



மறைதல் 17 . 01 . 2025

## அமரர்.கலாநிதி. குழந்தை ம.சண்முகலிங்கம்

1977களில் எமது அன்றைய கிளி/பளை.மகாவித்தியாலயத்தில் எமக்குக் கற்பித்த பேராசானுக்கு எமது நெஞ்சு கனக்கும் நினைவுகள்!

செம்பாட்டு மண் காலில் ஒட்டிட
காலை வேளை கண்ணாடி அணிந்து வந்தீரே!
சமூகக் கல்விப் பாடத்தில் வெளிக்களப் படம்
வெவ்வேறு கோணத்தில் கற்பித்தீர்கள்
அங்கதச்சுவையுடன் அலுப்படையாக் கல்வி
அனுதினம் ஊட்டிய ஆசுகவி நீங்கள்!
உங்கள் ஆற்றல்கள் அளவிட முடியாதிருந்தும்
அகந்தையோ, செருக்கோ இன்றிய ஆளுமை!
எளிமை வாழ்வுக்கு இலக்கண மாந்தர்.
நாடகத் துறையின் நாத நரம்பு.
நடிப்புக் கலைநயந்த நாமநாயகன்.
நாடக அரங்கக் கல்லூரி நினைவுகளை,
நினைவில் மீட்டித் தந்தோம் இறுதி விடை!
பளை மண் என்றும் மறவா நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்.

(அ-2086)

நீங்காத நினைவுகளுடன்...
கிளி/பளை மகாவித்தியாலய மாணவ நண்பர்கள் வட்டம்- பளை



இயற்கை நண் பர்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 14 ஆம் திகதி கைதடி சைவ ஐக் கிய சங்க முன்ற லில் சிறு தானியப் பொங்கல் இடம் பெற்றது.
(படம்- சுபேசன்)

# இராசிபலன்

20.01.2025
தை 07, திங்கட்கிழமை
சஷ்டி முற்பகல் 10.29 மணிவரை
அத்தம் முன்னிரவு 8.57 மணிவரை

சுபநேரம் 12.35-2.05 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை

சந்திராஷ்டமம் - சதயம், பூரட்டாதி

வளவன்

**மேஷம்:** நல்லவர்களின் அறிவு ரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக் கியத்தில் தெளிவு பிறக் கும், குடும்பத்தில் குதூகலம் கிடைக் கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** நேற்றைய பிரச்சினை யொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், பாசத் தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர் கள்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டி யாகச் செயற்பட்டவர் கள் மனம்மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக் கும், மாற்றினத்தவர் மூலம் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்:** பூர்வீகச் சொத்து சம் பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**சிம்மம்:** சான்றோர்களின் சந் திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென் படும் இறைவழிபாட் டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திக ளால் உற்சாகமடைவீர் கள், பணத் தேவைகள் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்தினர் வருகையுண்டு.

**கும்பம்:** நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல்நலனில் அதிக கவனம் தேவை, கௌரவக் குறை வுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உரு வாகும், பணவரவு திருப்தி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**கன்னி:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த் தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக் குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**தனுசு:** எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கட்டடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்:** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங் கும் நாள், குடும்பத்தினரி டையே அந்நியோன் னியம் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

நீ அமைதியாக வாழ விரும்பினால் சந்தோசப்படாமல் இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

வரும் முன் காப்பதே சிறந்தது. அதாவது நோய் வந்தபின்பு சிகிச்சை பெறுவதை விட நோய் வர முன்பே அதைத் தடுப்பதே சிறந்தது. அதற்கு நோய் எதிர்ப்பு சக்தி என்ற ஒன்று தேவை. அதற்கு குழந்தைகளில் இருந்து பெரியவர்கள் வரை எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது எவ்வாறு என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அதற்கு எங்கு இருந்து எதில் இருந்து உடம்பிற்கு இந்த எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது என்று பார்த்தால் பரம்பரை கூட ஒரு காரணமாக இருந்தாலும் நமது வாழ்வியல் முறையில் உணவு பழக்கவழக்கங்களே முதலிடத்தில் வருகிறது.

இதற்கு எப்படியான நல்ல உணவுகளில் இந் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என எடுத்துக்கொண்டால் பழங்கள், காய்கறிகள் முதலிடத்தில் வருகின்றது.

ஏனெனில் முக்கியமான கண்ணுக்குப் புலப்படாத நுண்ணூட்டச் சத்துக்களான உயிர்ச் சத்துக்கள், தாதுச் சத்துக்கள் கூடுதலாக இப்பழங்கள், காய்கறிகளில் தான் கிடைக்கிறது.

இத் தடுப்புச்சக்தியை உணவு முறை மாற்றங்களாலும் இயற்கையாக கிடைக்கும் தாவரங்கள் பழங்களாலும் கூட்ட முடியும். தூக்கத்திற்கும் நோய் எதிர்ப்பு சக்திக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. தூக்கமானது இடைவிடாத நேரமாக 7 மணி நேரம் தூங்க வேண்டும். இவ்வாறு தூங்கும் போது 1 1/2 மணி நேரத்திற்கு ஒரு முறை 5 சுழற்சிகள் (cycles) இடம்பெறும்.

இதனால் எமது நோய் எதிர்ப்பு சக்தி கூடும். அதாவது ஒழுங்காக உறங்கி எழுந்தால் அடுத்தது சுத்திகரிக்கப்பட்ட சீனி, பேக்கரி உணவுகள், காபோவைதரேற்று போன்றவற்றை நன்றாக குறைக்க அல்லது தவிர்க்க வேண்டும். இப்படி எடுத்தால் நிச்சயமாக நோய் எதிர்ப்பு சக்தி குறையை வாய்ப்பு உண்டு.

அடுத்து முக்கியமானது எமது உடம்பிலுள்ள நீர். நீர் ஆனது நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும். நாம் அதை கவனத்தில் எடுப்பது குறைவு. தினமும் 2-3 லீற்றர் நீர் அருந்த வேண்டும். இவ் குடிநீரானது எமது இதயம், மற்றும் சிறுநீரகத்தின் செயற்றிறனை அதிகரிக்கும். அடுத்ததாக எமது உடற்பயிற்சி. அதிகமான பளுத் தூக்கி உடற்பயிற்சி செய்வது அதிகமாக நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகப்படுத்தாது. சாதாரணமான பாதநடைப்பயிற்சி நிச்சயமாக நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கச் செய்யும். அடுத்ததாக மன அழுத்தம் இன்றிய வாழ்வு இதற்கு மனதை ஒரு நிலைப்படுத்தும் யோகா, தியானப்பயிற்சி போன்றவற்றை மேற்கொள்ளலாம். உதாரணமாக மன அழுத்தம் ஏற்படும் அல்லது பயப்படும் போது நுரையீரலின் வலு (capacity) குறைந்து, ஒட்சிசனின் அளவு குறைந்து எதிர்ப்பாற்றலை குறைத்து விடும். அடுத்ததாக நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் உணவுகள் என்று பார்த்தால் Orac Value அதிகமுள்ள உணவுகளாக இருக்க வேண்டும்.

Orac value அதிகமான என்று எடுத்துக் கொண்டால் எமது உடம்பிலுள்ள free radicals எனும் கெட்ட வேதியற் பொருட்களை அழிக்கும் Anti oxidant தன்மையுள்ள உணவுகளில் முக்கியமானது. முருங்கைக் கீரை, சீரகம், தூய மஞ்சள்தூள் போன்றவற்றை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக சித்தமருத்துவத்தில் 2 சிட்டிகை மஞ்சள்தூளை பசுப்பாலினை காய்ச்சி அதனுடன் சேர்த்து அருந்தும்படி அறிவுரை கொடுப்போம்.

அடுத்ததாக இஞ்சி, ஏலம், உள்ளி, மிளகு, இலவங்கம் போன்ற உணவுகளுக்கும் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் தன்மை உண்டு. இவற்றை சம்பல், இரசம், சாம்பாறு போன்ற உணவுகளாக தயாரித்து எடுத்துக் கொள்ளலாம். அடுத்து கறுப்பு திராட்சை பழத்தில் விதையில் ரெஸ்வஸ்பிரோல் எனும் நல்ல வேதியற் பொருளுண்டு. இது இருதயம், கல்லீரல், நுரையீரல் போன்றவற்றை வலுப்படுத்தக்கூடியது.

இதற்கு கறுப்பு திராட்சை பழங்களை விதைகளுடன் சாப்பிட வேண்டும். அடுத்து நிச்சயமாக வாரத்தில் இரண்டு தடவைகளாவது ஊர் மாதுளம்பழம் இரவில் படுக்க போகும் முன்பு சாப்பிட வேண்டும். இதனால் இரத்தத்திலுள்ள ஈமோகுளோபினின் அளவும் அதிகரிக்கும். அதேபோல் நோய் எதிர்ப்பு ஆற்றலையும் அதிகரிக்கச் செய்யும். அடுத்தாக நெல்லிக்கனி அதிகளவு உயிர்ச்சத்து C யும் தாதுச் சத்துக்களும் கொண்டது. இதைவிட பாலும், பாற்பொருட்களும், கரட், பப்பாளிப் பழம், கொய்யாப்பாழம், மாம் பழம் போன்றவற்றையும் எடுக்கலாம். தினமும் மேற்கூறியவற்றுள் ஒரு பழத்தையாவது சேர்த்துக் கொள்ள வேண்டும்.



சர்க்கரை வள்ளிக்கிழங்கும் சிறந்த ஊட்டச்சத்துள்ள உணவாகும். அடுத்து முக்கியமான உயிர்ச்சத்து D ஆகும். இது என்புகளில் உறுதித் தன்மைக்கும், எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தவும் சிறந்தது. அது முட்டை மஞ்சட் கருவிலும் கிடைக்கும். அத்துடன் காலையில் 15 நிமிடமாவது வெயிலில் நிற்க வேண்டும். இதிலே உங்களுக்கு உயிர்ச் சத்து D யை தொகுக்கக்கூடியதாக இருக்கும்.

உதாரணமாக எமக்கு தினமும் அதாவது ஒரு நாளைக்கு 500 மில்லிக்கிராம் உயிர்ச்சத்து C தேவை. இது எமக்கு ஒரு நாளைக்கு ஒரு நெல்லிக்காய், ஒரு கொய்யாப் பழம் சாப்பிட்டாலே கிடைக்கும். பச்சையாக சாப்பிட வேண்டும்.

மற்றும் இரும்புச் சத்துக்காக பேரீச்சம்பழம், முருங்கைக்கீரை, கொள்ளு, குரக்கன், பொட்டுக்கடலை, கறுப்பு எள்ளு, கொண்டல் கடலை, ஓட்ஸ், ஆட்டு இரத்தம், ஈரல் இவற்றில் ஒன்றையாவது தினமும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து உயிர்ச்சத்து B6 உள்ள எல்லா கடலை வகைகளிலும் வாழைப் பழத்திலும் உண்டு.

இதை சாப்பிட மறந்து விடக்கூடாது. அத்துடன் புரதச் சத்துள்ள பால், முட்டை, ஊர்க்கோழி, இறைச்சி, பருப்பு, பயறு, சோயா, மொச்சை போன்றவற்றை மாற்றி மாற்றி பயன்படுத்த வேண்டும். முக்கியமாக பயறு, மொச்சை போன்றவற்றை ஊற வைத்து சாப்பிட வேண்டும்.

ஊற வைக்கும் போது phytate எனும் சத்து அழிந்து விடும். இலகுவாக தானியங்களிலுள்ள சத்துக்கள் இலகுவாக உடம்பால் அகத்துறிஞ்சப்படும். அடுத்து Omega 3 fatty acid உள்ள உணவுகளான எல்லா கீரை வகைகள், வெந்தயம், மீன்வகைகள், வால்நட், உளுந்தங்களி போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்தையில் அரிசி வாங்கும் நிலையில் இன்றைய விவசாயிகள்

## கவலை வெளியிட்ட விவசாயிகள்

(தருமபுரம்)

**நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக விவசாயிகள் ஆகிய நாங்களும் அரிசியை கடைகளிலேயே கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

புளியம் பொக்கணை கமநல சேவை பிரிவுக் குட்பட்ட விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில், தற்பொழுது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக அறுவடை செய் வதற்கு தயார் நிலையில் இருந்த பல ஆயிரக்கணக் கான ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கி தற்பொழுது முளைக்க ஆரம்பித்துள்ளன.

விதைத்த நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரும் பாதிப் புக்குள்ளாகி உள்ளது.

ஒவ்வொரு வருடமும் வெள்ளம் மற்றும் நோய் தாக் கம் காரணமாக பாதிக்கப் பட்டு நிமிர முடியாத நிலை யில் உள்ளோம்.

ஒரு சில விவசாயிகளுக்கு மாத்திரமே அவர்களின் வங்கிக்கணக்கில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு இன்ன மும் பணம் கிடைக்க வில்லை. இம்முறையும் பாரி யளவிலான அழிவு ஏற்பட் டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டு எமக்கு ஏற் பட்டுள்ள அழிவுக்கான கொடு ப்பனவை வழங்க வேண் டும். இல்லாவிடில் தொடர்ச்சி யாக நெற்செய்கை செய்ய முடியாத நிலைக்கு நாம் தள்ளப்படுவோம் எனவும் அவர்கள் கவலை தெரிவித் துள்ளனர். (நி-8-316)

# பெருந்தோட்ட பிரதி அமைச்சரை சந்தித்த பனைசார் உற்பத்தி, ஏற்றுமதியாளர்கள்



(சாவகச்சேரி)

பனைசார் உற்பத்தியாளர் கள் மற்றும் பனம் பொருள் ஏற்றுமதியாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற் பகல் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகா தேவன் தலைமையில் கைத டியில் அமைந்துள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் வைத்து பெருந்தோட்ட பிரதி அமைச்சர் சு.பிரதீப்பை சந்தித் திருந்தனர்.

இதன்போது பனை சார் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தாம் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக பெருந்தோட்ட பிரதி அமைச்சர் பிரதீப்பிடம் எடுத் துரைத்திருந்தனர்.

மேற்படி சந்திப்பில் கடற் றொழில் அமைச்சர் இ.சந்திர சேகர், பாராளுமன்ற உறுப் பினர் ரஜீவன், பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர், பனை அபிவிருத்திச் சபை அதிகாரி கள், பணியாளர்கள் எனப் பல ரும் கலந்து கொண்டிருந்த னர். (நி-8-30)

# வித்தியா ஞாபகார்த்தமாக முன்பள்ளிக்கு உபகரணங்கள்



(சாவகச்சேரி)

புங்குடுதீவு மத்திய கல் லூரி மாணவி அமரர் சி.வித் தியாவின் நினைவாக அண் மையில் புங்குடுதீவு நசரெத் முன்பள்ளிக்கு கற்றல் உபகரண ங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அமரர் வித்தியாவின் சிறிய தந்தையாரின் நிதிப் பங் களிப்பில் சூழகம் அமைப்பின் இணைப்பாளர் க.குணாளன் ஊடாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 41<br>8 இல் செவ்<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்: BSc, Staff Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு: BSc(Graduate), Engineer<br>தொ.இ: B/15075 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14672 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 57<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc,Teacher<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர், உத்தியோகம்<br>தொ.இ: B/15077 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 14 ½<br>5 இல் சூரி செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bsc, Computer Engineer (Canada)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(கனடா)<br>தொ.இ: G/14952 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 42<br>8 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Dip in English, Teacher<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர், banker, DO<br>தொ.இ: B/15079 | பிறப்பு: 2001 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>2 இல் செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L,<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14676 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# நீர்வரத்து அதிகரிப்பால் பாவற்குளத்தின் நான்கு வான்கதவுகள் திறப்பு

## அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவிப்பு



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதனால் அதன் 4 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

எனவே அதன் கீழ் உள்ள பகுதிக ளில் வசிக்கும் மக்களை தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரி வித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன், பாவற் குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதி கரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளளவான 19.4 அடியை எட்டியுள்ளதால், அதன் நான்கு வான் கதவுகளும் 6 அங்குலத்திற்கு திறக்கப் பட்டுள்ளன. அத்துடன் தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந் தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும் முன் னெச்சரிக்கையுடனும் இருக்க வேண் டும்.

அத்துடன் நெளுக்குளம் - நேரிய குளம் வீதி ஊடாக பயணிப்பவர்க ளும் அவதானமாக போக்குவரத்தை மேற்கொள்ளுமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள் ளது. (நி-8-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பதவியேற்கிறார் ட்ரம்ப் பலப்படுத்தப்பட்டது பாதுகாப்பு!

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் இன்று பதவியேற்கிறார். தலைநகர் வோஷிங்டனில் உள்ள பாராளுமன்ற கட்டடத்தில் பதவியேற்பு விழா நடைபெற உள்ளது. வழக்கமாக ஜனாதிபதி பதவியேற்பு விழா பாராளுமன்றம் முன்பாக நடைபெறும்.

ஆனால் கடுமையான குளிர் நிலவுவதால் பாராளுமன்ற கட்டடத்திற்கு உள்ளே ரோடுண்டா என்ற பகுதியில் விழா நடைபெறவுள்ளது.

இதற்கிடையே ட்ரம்ப், புளோரிடாவின் பாம் பீச்சிலிருந்து வோஷிங்டனுக்கு தனி விமானத்தில் தனது மனைவி, மகனுடன் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளதை குறிக்கும் வகையில், விமானத்தில் ஸ்பெஷல் மிஷன் 47 என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பதவியேற்பு விழாவின் கருப்பொருள் 'நமது நீடித்த ஜனநாயகம்: ஒரு அரசியலமைப்பு வாக்குறுதி' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப் பதவியேற்பு விழாவையொட்டி அமெரிக்கா முழுவதும்வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

குறிப்பாக வோஷிங்டனில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பொலிஸார் மற்றும் சிறப்பு பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

வோஷிங்டனில் ட்ரம்பின் ஆதரவாளர்கள் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் குவிந்து வருகிறார்கள்.

ட்ரம்ப் பதவியேற்றதும் தனது முதல் நாளில் எந்தெந்த உத்தரவுகளில் கையெழுத்திடுவார் என்ற எதிர்பார்ப்பு உலக நாடுகள் பலவற்றில் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஈரான் உச்ச நீதிமன்றில் நீதிபதிகள் சுட்டுக்கொலை!

## ஈரானில் பரபரப்பு

(டெஹ்ரான்)

கைத்துப்பாக்கியுடன் ஈரான் உச்சநீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்த மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் ஈரானில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தலைநகர் டெஹ்ரானில் உள்ள உச்சநீதிமன்ற வளாகத்திற்குள் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இரண்டு நீதிபதிகள் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன:

கைத்துப்பாக்கியுடன் உச்ச நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்த அந்த நபர் நீதிபதிகள் மீது துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

பலியானவர்கள் அல் ரஜினி மற்றும் அல் மொகிஸ்சே என அடையாளம் காணப்பட்டனர். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தன்னை தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்தத் தாக்குதலில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாக அரச செய்தி நிறுவனமான ஐஆர்என்ஏ தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட நீதிபதிகள் இருவரும் தேசிய பாதுகாப்பு, பயங்கரவாதம், உளவு பார்த்தல் போன்ற முக்கிய வழக்குகளில் விசாரணை நடத்தி வந்தவர்கள் என ஈரானின் நீதித்துறை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடத்தியவரின் நோக்கம் தெரியாத நிலையில் அவர் மீது இதற்கு முன் எந்த வழக்கும் இல்லை என முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



# எரிபொருள் தாங்கி வெடித்ததில் 70 இற்கும் மேற்பட்டோர் பலி

## நைஜீரியாவில் துயரம்



(அபுஜா)

நைஜீரியாவில் எரிபொருள் தாங்கி வெடித்ததால் ஏற்பட்ட விபத்தில் 70 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

தலைநகர் அபுஜாவையும் வடக்கு நகரமான கடுனாவையும் இணைக்கும் வீதியில் 60,000 லீற்றர் பெற்றோலை ஏற்றிச் சென்ற எரிபொருள் தாங்கியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

எரிபொருள் தாங்கி கவிழ்ந்த பிறகு மக்கள் எரிபொருளைப் பெறுவதற்காக ஓடிக்கொண்டிருந்த போது அது வெடித்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

இதன்போது 70 பேர் வரையில் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களில் பலர் அடையாளம் காண முடியாத அளவுக்கு எரிந்து போயிருந்ததாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. (நி-8)

# 3 மணி நே...

# இஸ்... போ...

(ஜெருசலேம்) - காசாவில் நீ... கப்பட்ட போர் நி... தாமதத்திற்குப்... வந்துள்ளது.

ஆரம்பத்தில் போர் நிறுத்தத்தின் முதல் கட்டம் அந் நாட்டு நேரப்படி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணிக்கு அமுலுக்கு வருவதாக இருந்தது.

எனினும் விடுவிக்கப்படும் மூன்று பெண் பணயக்கைதிகளின் பட்டியலை ஹமாஸ் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் அது தாமதமானது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி, ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப் படவுள்ள பணயக்கைதிகளின் பட்டியலை ஹமாஸ் தாமதமாக

(வோஷிங்டன்)

கடந்த நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்ற நிலையில் இன்று திங்கட்கிழமை அவர் பதவியேற்க உள்ளார்.

எனவே தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் தனது அதிகாரத்தை முடிந்தவரை பயன்படுத்தி முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார்.

குற்ற வழக்கில் சிக்கிய தனது மகன் ஹண்டர் பைடனுக்கு பொது மன்னிப்பு வழங்கியது, ரஷ்யா மீது கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு அனுமதி கொடுத்தது உள்ளிட்டவை அதில் அடங்கும். இந்நிலையில் பதவிக்காலத்தின் இறுதி நாட்களில் இருக்கும் ஜோ பைடன் நேற்று முன்தினம் ஒரே நாளில் 2500 பேருக்கு பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## நேர தாமதத்தின் பின் அமுலுக்கு வந்தது

# ஸ்ரேல் - ஹமாஸ் பார் நிறுத்தம்!

ம்)

நீண்டகாலமாக எதிர்பார்க் ர் நிறுத்தம் மூன்று மணி நேர ற்குப் பின்னர் நடைமுறைக்கு ு.



வெளியிட்ட பின்னர் உள்ளூர் நேரப்படி காலை 11:15 மணிக்கு போர் நிறுத்தம் அமுலுக்கு வந்ததாக இஸ்ரேலிய பிரதமரின் அலுவலகம் தெரிவித்தது.

ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்படும் மூன்று இஸ்ரேலிய பெண் கைதிகள் ரோமி கோனென், டோரன் ஸ்டெய்ன் பிரெச்சர் மற்றும் எமிலி டமாரி என்று ஹமாஸ் பெயரிட்டதை அடுத்து இந்த அறிக்கை வந்தது.

பல பாலஸ்தீனிய கைதிகளுக்கு ஈடாக விடுவிக்கப் படவுள்ள மூன்று கைதிகளின் பெயர்களை வழங்குவதற்கான தனது உறுதிப்பாட்டை ஹமாஸ் நிறைவேற்றவில்லை என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு முன்னதாக குற்றம் சாட்டியிருந்தார்.

இதேவேளை, போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேலிய அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதாக தீவிர வலதுசாரி யூத சக்தி கட்சி அறிவித்தது.

அதன்படி, இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் இதமர் பென்-க்விர் மற்றும் அவரது தீவிர வலதுசாரி யூத சக்தி கட்சியின் அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருந்து இராஜினாமா செய்வதாக கூறியதுடன், அதற்கான கடிதங்களையும் சமர்ப்பித்தனர்.

பிரதமர் நெதன்யாகுவுக்கு எழுதிய இராஜினாமா கடிதத்தில் இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் இதமர் பென்-க்விர், அரசாங்கத்தை கவிழ்க்க தான் பணியாற்றமாட்டேன் என்றும், ஆனால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை "பயங்கரவாதத்திற்கு முழுமையான வெற்றி" என்றும் விமர்சித்தார்.

இதனிடையே போர் நிறுத்தம் அமுலுக்கு வருவதற்கு முன்பாக இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் சுமார் 10 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(நி-8)

## ஒரே நாளில் 2500 பேருக்கு பொதுமன்னிப்பு வழங்கிய ஜோ பைடன்

மன்னிப்பு வழங்கியுள்ளார்.

வன்முறையற்ற - சாதாரண போதைப் பொருள் குற்றங்களுக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சுமார் 2,500 பேருக்கு தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜோ பைடன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். அமெரிக்க வரலாற்றிலேயே ஒரே நாளில் இத்தனை பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது இதுவே முதல் முறை.

வன்முறையில் ஈடுபடாதபோதிலும் மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக பைடன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

முன்னதாக அமெரிக்காவின் மத்திய நீதிமன்றங்களால் 37 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க கடந்த மாதம் ஜோ பைடன் உத்தரவிட்டிருந்தார்.

அவர்கள் செய்த கொலை கண்டிக்கத்தக்கதாக இருப்பினும் மத்திய அளவில் மரண தண்டனை விதிக்கப்படுவது தவறு என்பதால் அவர்களுக்கான தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதாக பைடன் தெரிவித்தார்.

கடந்த 2003 முதல் மத்திய நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படாமல் இருந்த நிலையில் 2016 இல் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அதை செயற்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

ஜனவரி 20 முதல் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவி ஏற்க உள்ளதால் அவரிடம் இருந்து மரண தண்டனை கைதிகளை பாதுகாக்கவே ஜோ பைடன்இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த யாழ்ப்பாணம் பொன்னாலை ஸ்ரீ வரத ராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் 53 ஆவது வருடாந்த பஜனை ஊர்வலம் நேற்றைய தினம் இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

# 20 லட்சம் ரூபாய் பெறுமதியான ஆம்பருடன் யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சுமார் 20 இலட்ச ரூபாய் பெறுமதியான திமிங்கலத்தின் ஆம்பருடன் நேற்று முன்தினம் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குருநகர் பகுதியை சேர்ந்த 58 வயதான நபர் ஒருவர் 465 கிராம் ஆம்பருடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 250 | 250-350 |
| உருளைக்கிழங்கு | 240 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 800 | 1000 | 800-850 |
| தக்காளி | 350 | 350 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 150-200 |
| கோவா | 250 | 200 | 180 |
| கரட் | 300 | 350 | 320 |
| பூசணி | 120 | 150 | 80-100 |
| புடோல் | 150 | 200 | 150 |
| வாழைக்காய் | 150 | 150 | 120-150 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 150-400 |
| பெரிய வெங்காயம் | 350 | 250 | 300 |
| பாகற்காய் | 600 | 500 | 500 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 100 |
| பயற்றங்காய் | 800 | 600 | 400-500 |
| லீக்ஸ் | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 500 | 500 | 430 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 |
| முருங்கைக்காய் | -- | 1000 | -- |
| போஞ்சி | 400 | 100 | 350 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 220 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 80 |
| தேசிக்காய் | 300 | 150 | 200-250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 180-200 | 150-200 |
| இராசவள்ளி | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 |
| முள்ளங்கி | 140 | 150 | 150 |
| பொன்னாங்காணி | 120 | 150 | 100 |
| வல்லாரை | 60 | 100 | 50 |
| ஈரப்பலா | 100 | 50 | 100 |

## இன்று ஒரு தகவல் 303



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# தொண்டு

ஒரு ஊரிலே ஒரு பாதிரியார் இருந்தார். பல நாட்கள் சந்தோசமாக வாழ்ந்தார். ஒரு நாள் அவர் மடத்து சமையல் அறையில் பாத்திரங்களைக் கழுவி சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்திலே ஒரு தேவதூதன் அவர் முன்னால் வந்து நின்றான். இவர் நிமிர்ந்து பார்த்தார்.

ஆண்டவர் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறார். பரலோகத்திலே வாசம் செய்யிறதுக்கு உங்களுக்கு நேரம் வந்துவிட்டது என்று கூறினார் அந்த ஆள்.

ஆண்டவருக்கு என்னுடைய ஞாபகம் வந்ததற்கு நன்றி. ஆனாலும் நீயே பாரு... எவ்வளவு பாத்திரங்களை இங்கே சுத்தப்படுத்த வேண்டியிருக்கிறது. நான் நன்றி கெட்டவனாக இருக்க விரும்பவில்லை. இந்தப் பணியை முடிக்கிற வரைக்கும் என் பரலோக வாழ்வைத் தள்ளி வைக்க முடியுமா? நீ என்ன நினைக்கிறாய் என்று கேட்டார்.

தேவதூதன் தனக்கே உரிய விவேகத்தோட அன்போடு பாதிரியாரைப் பார்த்தான். சரி என்ன செய்யலாம் என்பதை பின்பு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போய்விட்டான்.

ஒருநாள் அந்தப் பாதிரியார் தோட்டத்திலே உள்ள களைகளையெல்லாம்... ஒரு களைக் கொத்தியால் கொத்தி களையெடுத்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்திலே இந்த தேவதூதன் மறுபடியும் அவர் முன்னால் வந்து நின்றான்.

பாதிரியார் பார்த்தார். இதோ பாரு! இந்தத் தோட்டம் முழுவதும் எவ்வளவு களைகள் மண்டிக்கிடக்கிறது? பரலோகம் கொஞ்சக் காலம் எனக்காகப் பொறுத்திருக்கலாம் என்று நீ நினைக்கிறாயா? என்று கேட்டார்.

தேவதூதன் சிரித்துக் கொண்டே மறுபடியும் மறைந்துவிட்டான். மறுபடியும் அவர் களையெடுக்கிறது, தானியக் களஞ்சியத்திற்கு வர்ணம் பூசுறது இவை மாதிரி வேலைகளிலே ஈடுபட்டார். இன்னொரு நாள். ஒரு மருத்துவமனையிலே நோயாளிகளைக் கவனிக்கிற வேலையிலே ஈடுபட்டிருந்தார் அந்தப் பாதிரியார். ஒரு நோயாளியின் தாகத்திற்கு தண்ணீர் கொடுத்து விட்டு நிமிர்ந்து பார்க்கிறபோது தேவதூதன் மறுபடியும் அவர் முன்னால் தோன்றினான்.

இந்தத் தடவை பாதிரியார் தன்னலமற்றவராக..பேரன்பைக் காட்டக்கூடிய வகையிலே.. தன்னுடைய இருகைகளையும் உயர்த்தியபடி தேவதூதனின் கவனத்தை பிணியால் வாடக்கூடிய நோயாளிகளின் பக்கம் திருப்பினார்.

தேவதூதன் ஒன்றும் சொல்லவில்லை. மறைந்துவிட்டான் அன்றைக்கு மாலை பாதிரியார் மடத்திலே உள்ள தன்னுடைய அறைக்குப் போய் இளைப்பாறினார். யோசித்துப் பார்த்தார். தேவதூதனையும் தேவதூதனின் விருப்பத்தையும் பல நாட்கள் தள்ளிப்போட்டுக் கொண்டு வந்ததையும் நினைத்துப் பார்த்தார். திடீர் என்று தான் முதுமையடைவதையும் சோர்வடைவதையும் உணர்ந்தார். ஆண்டவரை நினைத்தார்.

ஆண்டவரே உம்முடைய தூதனை மறுபடியும் என்னிடம் அனுப்பினால் நான் சந்திப்பதற்கு ஆவலாக இருக்கிறேன் என்று சொல்கிறபோதே தேவதூதன் பக்கத்திலே வந்து நின்றான். பாதிரியார் நிமிர்ந்து பார்த்தார்.

நீ இப்பவே என்னை அழைத்துக் கொண்டு போக விரும்பினால் நான் பரலோகத்திற்கு வரத் தயாராக இருக்கிறேன் என்றார்.

தேவதூதன் அந்தப் பாதிரியாரை அன்புடனும் விவேகத்துடனும் பார்த்து நீங்கள் இதுவரைக்கும் வேறு எங்கேயோ இருந்ததாக நினைக்கிறீர்களா! என்றான்.பரலோகம் என்றால் என்ன என்று புரிந்து கொள்வதற்கு இந்த சம்பவம் நமக்கு உதவியாக இருக்கிறது.

தொண்டு செய்வதைவிட பெரிய செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. அது நமது மனசுக்குக் கொடுக்கிற சுகத்தை விட வேறு எதையும் கொடுக்க முடியாது.ஆனால் இந்தக் காலத்திலே எல்லாம் நாம் தொண்டு செய்ய வேண்டும் என்று நினைத்து ஏதாவது ஆரம்பித்தால் கூட அதை ஒரு மாதிரியாகச் சுத்தி நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடுகிறார்கள் சேர்.

ஒரு பெரியவர். அப்படித்தான் ஒரு தொண்டு செய்து கொண்டிருந்தார். ஒரு கோவில் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அதிலே ஒரு இடத்திலே ஒரு பலகையை வைத்து ஆணி அடிக்கிற வேலையைச் செய்து கொண்டு இருந்தார் அந்தப் பெரியவர். ஒரு சின்னப் பையன் அதை மிகவும் அக்கறையாக கவனித்துக் கொண்டிருந்தான்.

பெரியவர் இதைக் கவனித்தார்!

என்னப்பா பார்க்கிறாய். உனக்கும் இது மாதிரித் தொண்டு செய்யவேணும் என்று ஆசையாக இருக்கா? என்று கேட்டார். அதற்கு அந்தப் பையன்.அப்படி இல்லை. நீங்கள் ஆணி அடிக்கிறபோது கையிலே சுத்தியலாலே அடித்துக் கொண்டா என்ன செய்வீர்கள் என்று தெரிந்து கொள்வதற்கு தான் நிற்கிறேன். என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆபத்தாக மாறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்

## பின்னணி குறித்து பகீர் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் பல்வேறு பகுதிகளில் பதிவாகும் பாதாள உலகக் குழுவின் துப்பாக்கி சூட்டுச் சம்பவங்களின் பின்னணியில் வெளிநாட்டிலுள்ள குழுக்களின் மோதல் நிலைமை உள்ளதாக புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டுபாயில் மறைந்திருக்கும் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான போதைப் பொருள் வர்த்தக பிரச்சினைகளால் இவ்வாறான வன்முறைகள் இடம்பெறுவதாக புலனாய்வு அமைப்புகளுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

பாகிஸ்தானின் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தவறான தகவல்களை வழங்குவதன் மூலம் போதைப்பொருள் பெறுவது தடுக்கப்படுவதாகவும், இதனால் டுபாயில் இடம்பெறும் விருந்துகளில் முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் டுபாயிலுள்ள போட்டியாளர்கள் மீதுள்ள கோபத்தை இலங்கையில் உள்ள அவர்களின் உதவியாளர்கள் மூலம் முன்னெடுப்பது முக்கிய பிரச்சினையாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொழும்பு கல்கிசைப் பகுதியில் நேற்றைய தினமும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்று ஒருவர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இலங்கையின் பணவீக்கம் மேலும் உயரலாம்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையின் பணவீக்கம் இந்தாண்டு மேலும் உயரக் கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பணவீக்கத்தை 5 சதவீதத்தில் பேண எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேர்காணல் ஒன்றின் போது இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இதனை தெரிவித்தார்.

தற்போதைய எதிர்மறை பணவீக்க விகிதம் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் நேர்மறை நிலைகளை எட்டக்கூடும்.

கடந்த டிசம்பரில் பணவீக்க விகிதம் -1.7 ஆக இருந்தது. இதற்கிடையில் நாட்டின் வட்டி விகிதங்கள் மேலும் குறைக்கப்படும்.

அத்துடன் சந்தைக்கும் பொதுமக்களுக்கும் வழிகாட்ட ஒரு புதிய மாற்று விகிதம் அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பரிவர்த்தனைகளை எளிதாக்க டிஜிற்றல் கட்டண தளத்தை செயற்படுத்த உள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார். (நி-8)

# ஊழல் ஒழிப்பு பிரிவினரால் முன்னாள் அமைச்சர் கைது



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப் பாகங்களைப் பயன்படுத்தி வாகனத்தை ஒன்று சேர்த்ததோடு அதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டின் பேரில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய கைது செய்யப்பட்ட விஜித் விஜயமுனி சொய்சா இன்று பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, இதே போன்று சட்டவிரோதமான முறையில் வேறு வாகனங்களையும் தயாரித்து பயன்படுத்தியுள்ளாரா என்பது தொடர்பிலும் வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று வாக்குமூலம் வழங்குவதற்காக வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவில் முன்னிலையாகி இருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் சுமார் 5 மணித்தியாலத்திற்கும் அதிக நேரம் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அநுரவின் சீன பயணம் விமர்சிக்கும் நாமல்

(கொழும்பு)



சீனா மற்றும் இந்தியாவுடன் உடன்படிக்கைகளை செய்து கொண்டதன் மூலம், தேசிய மக்கள் சக்தியினர் தமது சொந்த வார்த்தைகளை தாமே மென்று சாப்பிடுவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் சீனாவுக்கான பயணங்களை வெற்றிகரமாக முடித்ததற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைப் பாராட்டிய அவர் இந்த கருத்தையும் பதிவிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்தபோது, அந்தக் கட்சியினர் இந்திய மற்றும் சீன நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை முரண்பாடாகவே கருதினர்.

இருப்பினும் தனது சொந்த வார்த்தைகளை மென்று அந்த நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டுள்ளதாக நாமல் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தாம் தற்போது உடன்படிக்கைகளை செய்துக் கொண்ட நிறுவனங்களை முன்னர் எதிர்த்தமை எதற்காக என்பதை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பொது மக்களுக்கு விளக்கவேண்டும் என்றும் நாமல் கோரிக்கை விடுத்துள்ளார்.

தெளிவான திசை தெரியாமல் இன்னும் தெளிவற்றதாக இருக்கும் அவர்களின் வெளியுறவுக் கொள்கை என்ன என்பதையும் அரசாங்கம் விளக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-8)

# சிறந்த சுற்றுலா இடமாக இலங்கை தெரிவு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது சிறந்த சுற்றுலா இடமாக இலங்கையை இங்கிலாந்தை தளமாகக் கொண்ட செய்தி நிறுவனமான பிபிசி தேர்ந்தெடுத்துள்ளது.

இது சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான நாட்டின் முயற்சிகளுக்கு மேலும் அங்கீகாரம் அளிப்பதாக அமைந்துள்ளது.

பிபிசி தனது சிறந்த 25 இடங்களின் வெற்றியாளர்களை அறிவிக்கையில், மூடுபனி படர்ந்த மலை உச்சியில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் மற்றும் அதன் பழங்கால ஆலயங்கள் வரை சுற்றித் திரியும் காட்டு யானைகள் மற்றும் நீர்ச்சறுக்கு போன்ற அநேகமான பார்வையிடங்களை இலங்கை கொண்டுள்ளதாக தெரிவித்தது.

இந்தப் பட்டியலில் இலங்கை ஒன்பதாவது இடத்தில் உள்ளதுடன், முதல் 10 இடங்களில் உள்ள ஒரே தெற்காசிய நாடாக இலங்கை பெருமை அடைகிறது. இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முக்கிய வருமான ஆதாரமான சுற்றுலாத் துறை, 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் தொற்று காரணமாக கடுமையான சரிவைச் சந்தித்தது.

எனினும் இத்தகைய பின்னணியில், நாட்டின் சுற்றுலாத் துறையை உலகளவில் மேம்படுத்துவதற்காக ஏராளமான திட்டங்கள் தொடங்கப்பட்டதன் விளைவாக, கடந்த ஆண்டில் மாத்திரம் 2 மில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளமையும் விசேட அம்சமாகும். (நி-8)

# அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## எச்சரிக்கும் எதிர்க்கட்சித் தலைவர்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உர மானியம் மற்றும் மின்சாரக்கட்டணக் குறைப்பு தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதி முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் பங்குபற்றிய போது சஜித் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணங்களை 33 வீதத்தினால் குறைக்க முடியும் என அரசாங்கம் உறுதிமொழி வழங்கியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் வரையில் பாராளுமன்றிற்கு உள்ளேயும் வெளியேயும் ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-8)

# வில்பத்து தேசிய பூங்காவிற்கு செல்லத் தடை

(கொழும்பு)

வில்பத்து தேசிய பூங்காவின் எளுவன்குளம் நுழைவாயில் மறு அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த கன மழையால் கலா ஓயா நிரம்பி வழிந்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் மூலம், கலா ஓயா வழியாகப் பாயும் சுமார் 6,000 கன அடி நீர் வில்பத்து தேசிய பூங்காவிற்குச் செல்லும் எளுவன்குளம்-கலா ஓயா பாலம் வழியாகப் பாய்ந்து, அந்தப் பகுதியை முற்றிலுமாக வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளது.

அதன்படி வில்பத்து தேசிய பூங்காவின் எளுவன்குளம் நுழைவு வாயிலுக்குப் பொறுப்பான வனவிலங்கு பிரிவை, மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட முடியாது என தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 684





இத்தனை நேரம் அநேகமாக அவர் ரதத்திலோ பல்லக்கிலோ ஏறித் தஞ்சையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பார். வா! நாமும் நம் வழியே போகலாம். "வைஷ்ணவரே! நான் வர முடியாது."

"இது என்ன, நீ ஒப்புக் கொண்ட காரியம் என்ன ஆயிற்று? காஞ்சியிலிருந்து ஆதித்த கரிகாலர் புறப்பட்டு விட்டதாகக் கேள்விப்படுகிறேன். நாம் உடனே வாயுவேக, மனோவேகமாகப் போனால்தான்..

ஆதித்த கரிகாலரிடம் கொடுக்க வேண்டிய ஓலையை நீரே கொடுத்துவிடலாமே? அவர் மதுராந்தகரைப் போல் ஸ்திரீ வேஷத்திலும் வர மாட்டார் இரவில் ஒழிந்தும் பிரயாணம் செய்ய மாட்டார். நீ என்ன செய்யப்போகிறாய்?

"உண்மையில் நான் மதுராந்தகரைப் பின் தொடர்ந்து இன்று சாயங்காலம் புறப்படவில்லை. வேறொருவரைத் தொடர்ந்து போக ஆரம்பித்ததில் மதுராந்தகரை வழியில் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது.

நான் ஒரு ஜோசியம் சொல்லுகிறேன். நீ தொடர்ந்து போக ஆரம்பித்தது ஒரு பெண் மணியாக இருக்கும்.

நீர் பொல்லாத வைஷ்ணவர்! ஒரு நாள் உம்முடைய மண்டையை உடைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கப் போகிறேன்.

இது உன்னால் முடியாத காரியம். ஏற்கனவே என் மண்டையை ஒரு காளாமுகனுக்கு அடகு வைத்திருக்கிறேன். அது போனால் போகட்டும் நீ குடந்தையிலிருந்து யாரைத் தொடர்ந்து புறப்பட்டாய்? அந்தப் பெண் யார்?

"கொடும்பாளூர் இளவரசி குடந்தை ஜோதிடர் வீட்டுக்கு வந்திருந்தாள். பல்லக்கில் ஏறிக்கொண்டு தனியாகப் புறப்பட்டுப் போனாள். உண்மையில் அந்தச் சித்தப்பிரமை கொண்ட பெண்ணைத் தொடர்ந்து நான் கிளம்பவில்லை. அவளுடைய பல்லக்கு நான் போக வேண்டிய பாதையில் கொஞ்சதூரம் போயிற்று. திடீரென்று அந்தப் பல்லக்கைச் சில மனிதர்கள் வந்து தாக்கினார்கள். கூடப் போன தாதிப் பெண்ணை மரத்தில் கட்டிப் போட்டு விட்டு வானதியை மட்டும் கொண்டு போனார்கள். வைஷ்ணவரே! அந்தப் பெண்ணின் கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளாமல் உம்மோடு வர எனக்கு இஷ்டமில்லை."

"அந்தப் பெண்ணைப் பற்றி உனக்கு என்ன அவ்வளவு கவலை?" "அது என்ன அப்படிச் சொல்கிறீர்? ஈழத்துப் பட்டமகாவீரர் சிறிய வேளாரின் புதல்வியல்லவா? பழையாறை இளைய பிராட்டியின் மனத்திற்குகந்த தோழியல்லவா? இன்னும், பொன்னியின் செல்வருக்கு வானதி தேவியை மணம் செய்விக்கப் போவதாகவும் ஒரு பிரஸ்தாபம் இருந்ததல்லவா?"

"அப்பனே! பொன்னியின் செல்வர்தான் கடலில் முழுகி இறந்துவிட்டாரே? அவருடைய திருமணத்தைப் பற்றி இப்போது என்ன கவலை?" "அவர் இறந்து விட்டார் என்பது என்ன நிச்சயம்? ஊகந்தானே?"

"அப்படியானால் அவர் உயிரோடிருக்கலாம் என்று நீ நினைக்கிறாயா?" "வைஷ்ணவரே! என்னுடைய வாயைப் பிடுங்கி ஏதேனும் இரகசியத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்பது உங்கள் உத்தேசமாயிருந்தால் அதை மறந்துவிடும்!"

"சரி! சரி! நீ பெரிய அழுத்தக்காரன் என்பது எனக்குத் தெரியும் ஆனால் வானதி தேவியைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம் இளைய பிராட்டிக்கு அவள் பேரில் உயிர் என்பதுதான் உனக்கு நன்றாகத் தெரியுமே?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நீச்சல் வீரர்கள்



மிகப் பழங்காலத்தில் பாண்டி நாட்டில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் வீரன் மற்றொருவன் பெயர் சூரன். வீரனும் சூரனும் ஆற்றல் மிக்கவர்கள். மலை ஏறுவதிலும் மரம் ஏறுவதிலும் வல்லவர்கள். நீச்சற்கலையில் நிகரற்றவர்கள். வேல் வீசுவதிலும் வில் வளைப்பதிலும் வாள் சுழற்றுவதிலும் அவர்களைப் போன்றவர்கள் யாரும் கிடையாது.

வைகையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடும் சமயங்களில்கூட அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு அக்கரைக்கு நீந்திச் சென்றிருக்கிறார்கள். ஏரி குளங்களில் நீந்துவது அவர்களுக்கு மிக எளிய கலை. இந்திர விழாவில் நடைபெறும் நீச்சல் போட்டிகளில் எத்தனையோ முறை அவர்கள் முதற் பரிசு வாங்கியிருக்கிறார்கள்.

பாண்டி நாடு முழுவதும் அவர்கள் புகழ் பரவியிருந்தது. வெளி நாடுகளிலும் தங்கள் திறமையைக் காட்டி விருது பெற வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். அந்த எண்ணத்தைச் செயற்படுத்த அவர்கள் ஒரு நாள் பயணம் புறப்பட்டுவிட்டார்கள்.

நாடு நாடாகச் சுற்றி அவர்கள் நல்ல பெயரும் புகழும் பெற்றார்கள். ஒருமுறை கடற்கரை அருகில் இருந்த ஓர் ஊருக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். புகழ்பெற்ற நீச்சல்காரர்கள் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட அந்த மக்கள் அவர்களைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டார்கள்.

"எங்களோடு போட்டி போட்டு நீந்தக்கூடிய இளைஞர்கள் இந்த ஊரில் யாராவது இருக்கிறார்களா?" என்று அவர்கள் சவால் விட்டார்கள். அவர்களோடு போட்டி போட பத்து இளைஞர்கள் முன் வந்தார்கள்.

போட்டி நடத்த ஏற்பாடாயிற்று. அவ்வூரில் ஓடிய ஆற்றின் ஒரு கரையில் உள்ள ஒரு துறைக்கு நீந்திச்செல்ல வேண்டும். நீச்சல்காரர்கள் குறிப்பிட்ட நேரத்தில் நீந்தத் தொடங்கினார்கள். மக்கள் கூட்டம் கரையில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. வழக்கம் போல் வீரனும் சூரனுமே முதலில் நீந்திச் சென்று அக்கரை சேர்ந்தார்கள். அவர்களுக்கு மக்கள் பல பரிசுகளை அள்ளி வழங்கினார்கள். இவற்றையெல்லாம் கண்டு தோற்றுப்போன இளைஞன் ஒருவனுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. அவன் அவர்களை நோக்கிக் கூறினான்: "ஆற்றைக் கடந்துவிட்டீர்கள்! இது அப்படியொன்றும் பெரிய செயலல்ல. உங்களால் கடலைக் கடக்க முடியுமா?"

"கடலா? அது என்ன?" என்று வியப்புடன் வீரனும் சூரனும் கேட்டனர். அவர்கள் அதற்கு முன் கடலைப் பார்த்ததேயில்லை. "கடலுக்குக் கரையே கிடையாது" என்று ஒரு பெரிய மனிதர் கூறினார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள் இறந்தும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் இனத்தின் பெரும் சொத்து குழந்தை சண்முகலிங்கம்

நாடகத்துறையின் பேராளுமை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் தேகவியோகம் அடைந்தார் என்ற செய்தி ஒரு பெரும் இழப்பை அறிவிப்பதாகும்.

தனது 93ஆவது வயதில் குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் மறைந்தாலும் அவர் எங்கள் தமிழினத்தின் ‐ நாடகத்துறையின் பெரும் சொத்து.

அந்த விலைமதிப்பற்ற பெரும் சொத்தை நாம் இழந்துவிட்டோம் என்பது அவரின் வயதைக் கடந்தும் பெரும் இழப்பைத் தருவதாகும்.

உண்மை. எங்கள் நாடகத் தமிழில் புதிய எண்ணக்கருக்களைப் புகுத்திய சிந்தனையாளர் அவர்.

யதார்த்தங்களை நகைச்சுவைப் பாங்குடனும் சாதாரண மனித மனதில் எழக்கூடிய அத்தனை உணர்வுகளினூடும் நாடகத்தை உள்வாங்கக்கூடியதாகப் படைப்பதில் குழந்தை சண்முகலிங்கத்துக்கு ஈடு இணை குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் மட்டுமே.

ஆம், அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு நிறைந்திருந்தது. குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் நெறியாள்கை செய்த அன்னையிட்ட தீ நாடகம் மேடையேறுகிறது.

அந்த மாலைப்பொழுதில் திரை அகலும் போது, பாரொடு விண்ணாய் பரந்த எம் பரனே … என்ற திருவாசகம் ஒலிக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் அந்த நாடகத்தில் பாத்திரமேற்றிருந்தனர்.

நாடகத்தின் நிதர்சனம் கண்டு வியக்காதவர்கள் இல்லை.

இடையிடையே மோகன ராகத்தில் திருவாசக வரிகளின் ஊடாட்டம் குழந்தை சண்முகலிங்கத்தின் உயரிய அர்ப்பணம் எனலாம்.

யுத்தத்தின் வடுக்களும் அதனால் ஏற்பட்ட உளநெருக்கீடுகளும் நாடகத்தின் ஊடாட்டமாக இருந்தபோது, நாடகத்தின் நுகர்ச்சியாளர்களில் கலங்காதவர்கள் ‐ கண்களை ஒற்றிக் கண்ணீரைத் துடைக்காதவர்கள் எவரும் இல்லை எனலாம்.

அத்தகு சித்தரிப்பும் யதார்த்தமும் உளவியல் சிந்தனையும் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் நாடகங்களில் அணி சேர்ந்திருந்தன.

அதனால் அவரின் நாடகங்கள் நாடகத்துறை சார்ந்தவர்களையும் பொதுமக்களையும் அவர் பால் ஈர்த்தன.

அத்தகு சிறப்புமிக்க அவர் எமக்குத் தந்த அன்னையிட்ட தீ, மண்சுமந்த மேனியர், எந்தையும் தாயும், ஆர்கொலோ சதுரர், கூடி விளையாடு பாப்பா, பஞ்சவர்ண நரியார் ஆகிய நாடகங்கள் குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் நாடகப் பேராளுமை என்பதைச் சான்றுப்படுத்தின.

இதுதவிர, முயலார் முயலுகிறார் எனும் அவரின் நாடகம் மாணவர்களின் தமிழ் மொழிப்பாடத்தில் இடம்பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவையாவற்றுக்கும் மேலாக, நாடகமும் அரங்கியலும் எனும் துறை யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தில் கருவுற்று நின்று நிலை பெறுவதில் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் வகிபங்கு காத்திரமானது.

சடங்குகள், சம்பிரதாயங்கள், பட்டங்கள், விருதுகள் என எதற்குள்ளும் தன்னை வரையறுத்துக்கொள்ளாத குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் எங்கள் ஈழத்தமிழினத்தின் பெரும் சொத்து.

அவரின் மறைவு எம் இனத்தின் நாடகத்துறைக்கும் மனிதநேயத்துக்கும் நகைச்சுவை உணர்வுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண சிறீதரன் எம்.பி ஊடாக முயற்சி

## வடமராட்சி வடக்கு சங்கம் தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஊடாக வடக்கு மாகாணத்திலிருந்து 10 பேர் கொண்ட குழு ஒன்று இந்தியாவுக்கு பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கான வழிவகைகளை நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம். கூடிய விரைவில் அது கைகூடலாம் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது கடற்பரப்பில் கடந்த தமிழ், சிங்கள புத்தாண்டில் இருந்து 90 வீதமானோர் தொழிலுக்குச் செல்லவில்லை.

இந்திய இழுவைப் படகுகளால் அவர்களது வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு எமது மீனவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பிரச்சினைக்கு இரண்டு நாட்டு அரசாங்கங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் தமிழ் நாட்டில் நடந்த அயலக மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மீனவர் பிரச்சினை தொடர்பில் பேசியிருந்தார். இதனை நாங்கள் வரவேற்கின்றோம். அதேபோல், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஊடாக வடக்கு மாகாணத்திலிருந்து 10 பேர் கொண்ட குழு ஒன்று இந்தியாவுக்குப் பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கான வழிவகைகளை நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம். கூடிய விரைவில் அது கைகூடலாம்.

நாங்கள் சட்டவிரோத மீன்பிடியை நிறுத்துமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

ஆனால், இதுவரை அது நிறுத்தப்படவில்லை. அப்படியானால், சட்டவிரோத மீன்பிடிக்கு அனைவருக்கும் அனுமதி வழங்குங்கள். புதிய கடற்றொழில் அமைச்சர் சட்டவிரோத மீன்பிடியை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம். எமது மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ந-7)

# கிளீன் ஸ்ரீலங்காவின் உயரிய நோக்கு இன, மத வேறுபாடுகளைக் களைவதே

## கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர்

*(யாழ்ப்பாணம்)*

நாட்டில் நிலவும் இன, மத வேறுபாடுகளைக் களைந்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதே கிளீன் ஸ்ரீலங்காவின் உயரிய நோக்கம் எனக் கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை, அன்பை, பாசத்தை ஏற்படுத்துகின்ற நிகழ்வுகள் பேச்சளவில் மாத்திரம் நிகழ்ந்திருக்கிறதே தவிர யதார்த்தபூர்வமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். ஆனால் எங்கள் நாட்டில் தை பிறந்தால் வழி பிறந்ததா? நாட்டில் மாற்றம் எற்பட்டதா? சிறுவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தப்பட்டதா? என்று தேடிப் பார்த்தால் எதுவுமே இல்லை.

இந்த வருட தைப்பிறப்பு என்பது 75 வருடங்களுக்கு பின்னர் நாங்கள் எல்லோரும் கூட்டிணைந்து புதிய அரசாங்கத்தை உருவாக்கியிருக்கின்ற நிலையில் நடைபெறுகின்றது. முதலில் எங்களுக்கு வழங்கிய ஆணைக்குத் தலை வணங்கி நன்றி கூறுகின்றோம். நீங்கள் வழங்கிய மாற்றத்துக்கான ஆணையூடாக மாற்றத்தை ஏற்படுத்துவோம். எந்தவிதமான பந்தாக்களும் இல்லாமல் தான் நாங்கள் உங்களிடம் வந்துள்ளோம்.

கிளீன் ஸ்ரீலங்கா என்பதில், எங்களுடைய இனம், மதம் மற்றும் மனங்களைச் சுத்தப்படுத்துவது தான் முதலாவது விடயமாகின்றது. சிதைந்து போயுள்ள மனங்களைச் சுத்தப்படுத்துவது தான் கிளீன் ஸ்ரீலங்காவின் நோக்கம்.

இந்தப் பொங்கலில் இருந்து புதிய பாதையில் பயணிப்போம். அரசாங்கம் புதிய பாதையில் பயணிக்கிறது. ஜனாதிபதி புதிய உலகத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறார். இந்தப் பாதையில் நாங்கள் மாத்திரமல்ல. நீங்களும் பயணிக்க வேண்டும். உங்களைத்தான் நாங்கள் நம்பியிருக்கின்றோம். நீங்கள், நாங்கள் இணைந்து இந்த நாட்டை முன்னேற்ற வேண்டும். அதற்காக அனைவரும் அணிதிரள வேண்டும் என்றார். (ந-7)

# வடலி அம்மனுக்கு இன்று சங்காபிசேகம்

*(வடலி)*

வடலி அம்மன் என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக தின சங்காபிசேகம் இன்று திங்கட்கிழமை காலை 07 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

அம்மனுக்கு 1008 சங்காபிஷேகம், பூசை என்பன இடம்பெறும். வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்மனின் வீதி உலாவும் நடைபெறும். இறுதியில் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. (ந-7)

# பெற்றோரின் பாராமுகத்தால் குழந்தை நீரில் மூழ்கிப் பலி

வாதுவ தல்பிட்டியப் பிரதேசத்தில் வீடொன்றின் முன்னே உள்ள சிறிய குளத்தில் விழுந்து இரண்டு வயதுக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

தாயும் தந்தையும் வீட்டில் இருந்த தருணத்தில், வீட்டின் முன் திறந்த வெளியில் உள்ள குளத்தின் அருகே குழந்தை சென்றுள்ள நிலையில் சிறிது நேரத்தின் பின்னர் குழந்தையைக் காணவில்லை எனத் தேடிய போது குழந்தை குளத்தில் வீழ்ந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து குழந்தையை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த போதும் குழந்தை உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# கஞ்சாவுடன் இளைஞன் கைது

*(வவுனியா)*

நெடுங்கேணிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சா வைத்திருந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுங்கேணிப் பொலிஸிற்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் நேற்று முன்தினம் (18) கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் பெரிய குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடையவர் ஆவார்.

கைதான நபரிடமிருந்து 2 கிலோ 140 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் – பகுதி – II

**02**

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | வண்ணார்பண்ணை வடக்கு | J 98, J 99ன் பகுதி | TC | 607 |
| 2 | கந்தர்மடம் வடமேற்கு | J 100, J 102, J 123ன் பகுதி | ITAK | 787 |
| 3 | கந்தர்மடம் வடகிழக்கு | J 103 | ITAK | 401 |
| 4 | நல்லூர் இராசதானி | J 106, J 107, J 108 | ITAK | 834 |
| 5 | சங்கிலியன் தோப்பு | J 109 | ITAK | 705 |
| 6 | அரியாலை | J 94ன்பகுதி, J 95, J 96ன் பகுதி | TC | 588 |
| 7 | கலைமகள் | J 91 | TC | 351 |
| 8 | கந்தர்மடம் தெற்கு | J 104, J 105 | TC | 535 |
| 9 | ஐயனார் கோவிலடி | J 97, J 101 | TC | 666 |
| 10 | புதிய சோனகத்தெரு | J88 | ITAK | 246 |
| 11 | நாவந்துறை வடக்கு | J 85 | ITAK | 524 |
| 12 | நாவந்துறை தெற்கு | J 84 | EPDP | 429 |
| 13 | பழைய சோனகத்தெரு | J 86, J 87 | UNP | 598 |
| 14 | பெரிய கடை | J 80, J 82 | ITAK | 504 |
| 15 | அத்தியடி | J 78, J 79 | TC | 479 |
| 16 | சுண்டிக்குளி - மருதடி | J 76, J 77 | ITAK | 595 |
| 17 | அரியாலை மேற்கு | J 92, J 93 | TC | 562 |
| 18 | கொழும்புத்துறை | J 61, J 62. J 63 | ITAK | 830 |
| 19 | பாசையூர் | J 64, J 65 | ITAK | 642 |
| 20 | ஈச்சமோட்டை | J 66 | TC | 615 |
| 21 | கதீட்ரல் | J 75 | TC | 318 |
| 22 | திருநகர் | J 67 | TULF | 311 |
| 23 | குருநகர் | J 70, J 71 | ITAK | 631 |
| 24 | யாழ்ப்பாண நகரம் | J 73, J 74 | ITAK | 596 |
| 25 | கொட்டடி - கோட்டை | J 81, J 83 | ITAK | 607 |
| 26 | றெக்கிளமேசன் மேற்கு | J 69, J 72 | ITAK | 1123 |
| 27 | றெக்கிளமேசன் கிழக்கு | J 68 | EPDP | 813 |

### 02. வல்வெட்டித்துறை நகர சபை

வல்வெட்டித்துறை நகர சபையில் மொத்தமாக 12 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் 9 கிராம அலுவலர் பிரிவுகளின் முழுப் பிரதேசமும் 3 கிராம அலுவலர் பிரிவுகளின் பகுதிப் பிரதேசங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது J/355 கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்குள்ளும், J/385 மற்றும் J/387 கிராம அலுவலர் பிரிவுகளின் ஒரு பகுதி பருத்தித்துறை பிரதேச சபைக்குள்ளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் நகர சபை 9 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும்.

வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை - 9 ஆகும். வல்வெட்டித்துறை நகர சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 6.17 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத்தொகை கிட்டத்தட்ட 11588 பேர். 2018ஆம் ஆண்டு நகர சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 6055 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சுயேட்சை குழு, தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

வல்வெட்டித்துறை நகர சபைத் தேர்தல் – 2018

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | தொண்டமானாறு | J 383, J 384 | EPDP | 246 |
| 2 | ஆதிகோவிலடி | J 386ன் பகுதி, J 388 | சுயேச்சை | 240 |
| 3 | ரேவடி | J 389, J 390 | ITAK | 243 |
| 4 | பொலிகண்டி | J 393 | ITAK | 279 |
| 5 | வல்வெட்டித்துறை | J 392 | ITAK | 147 |
| 6 | சிவன்கோவிலடி | J 391 | ITAK | 179 |
| 7 | வல்வெட்டி வடக்கு | J 355 | ITAK | 31 |
| 8 | கொம்மன்துறை | J 386ன் பகுதி, J 387ன் பகுதி | ITAK | 101 |
| 9 | மயிலியதன்னை | J 385ன் பகுதி, J 386ன் பகுதி | ITAK | 72 |

வல்வெட்டித்துறை நகர சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வல்வெட்டித்துறை நகர சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 9 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 9 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 17 (மேன்மிகை உறுப்பினர்கள் உட்பட) |

| அங்கீரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 1,322 | 31.70% | 5 | 7 | - | 2 |
| சுயேச்சைக் குழு | 1,069 | 25.64% | 4 | 1 | 3 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 659 | 15.80% | 2 | - | 2 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 619 | 14.84% | 2 | 1 | 1 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 230 | 5.52% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 187 | 4.48% | 1 | - | 1 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 84 | 2.01% | - | - | - | - |
| மொத்தம் | 4,170 | 100% | 15 | 9 | 8 | 2 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 4,170 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 42 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 4,212 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 6,055 |

### 03. பருத்தித்துறை நகர சபை

பருத்தித்துறை நகர சபையில் மொத்தமாக 7 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் 6 கிராம அலுவலர் பிரிவுகளின் முழுப் பிரதேசமும் 1 கிராம அலுவலர் பிரிவின் பகுதிப் பிரதேசமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. J/404 கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி பருத்தித்துறை பிரதேச சபைக்குள் உள்ளது. இந் நகர சபை 9 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 9 ஆகும். பருத்தித்துறை நகர சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 4.2 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டு சனத் தொகை கிட்டத்தட்ட 12404 பேர். 2018 ஆம் ஆண்டு நகர சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 7864 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சுயேட்சை குழு, தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன (SLPP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

பருத்தித்துறை நகர சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | பருத்தித்துறை நகர சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 9 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 9 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 15 |

| அங்கீரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 2,199 | 37.20% | 6 | 5 | 1 | - |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 1,880 | 31.80% | 5 | 3 | 2 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 777 | 13.14% | 2 | 1 | 1 | - |
| சுயேச்சைக் குழு | 404 | 6.83% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 403 | 6.82% | 1 | - | 1 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 100 | 1.69% | - | - | - | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 83 | 1.40% | - | - | - | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 66 | 1.12% | - | - | - | - |
| மொத்தம் | 5,912 | 100% | 15 | 9 | 6 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 5,912 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 69 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 5,981 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 7,864 |

### 04. சாவகச்சேரி நகர சபை

சாவகச்சேரி நகர சபையில் மொத்தமாக 11 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் நகர சபை 11 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்துதெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை-11 ஆகும். சாவகச்சேரி நகர சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 22.13 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெற் கொள்வன...

வுக்காக பாரவூர்தியில் வருகை தந்த ஒரு பகுதியினர் பரந்தன் பகுதியில் நெற்கொள்வனவில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பொதுமக்களுக்கு அவர்களின் தராசு மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து தராசு பொதுமக்களால் கைப்பற்றப்பட்டு சோதனையிடப்பட்டபோது ஒரு நெல் மூடைக்கு பத்துக் கிலோ குறைவாகக் காட்டும் வகையில் தராசு மாற்றப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து வாகனத்தில் ஏற்றப்பட்ட நெல் இறக்கப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்று பொலிஸார் விவசாயிகளின் முறைப்பாட்டைப் பதிவு செய்ததோடு, பிறிதொரு தராசில் நெல் மீளவும் நிறுக்கப்பட்டபோது ஒரு விவசாயிடமிருந்து சுமார் 24 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நெல் நிறை குறைத்து கொள்வனவு செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதுடன் குறித்த பணம் கொள்வனவாளர்களிடம் பெற்று விவசாயிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் இனிவரும் காலங்களில் நெல் கொள்வனவாளர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,316)

## பொதுப் பயன்...

சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் குடியரசின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபை 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயற்பட்டதுபோலவே தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகத்திலும் செயற்படுகிறது. தொழில் நுட்பக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மின்கட்டணத்தைக் குறைக்குமாறு யோசனை முன்வைத்தோம்.

இதற்கமைய மின்கட்டணத்தை 20 சதவீதத்தால் குறைப்பதற்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

மின்கட்டணம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எடுத்த தீர்மானம் குறித்து நிதியமைச்சின் ஆலோசனைகளைப் பெற வேண்டும். அல்லது சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டும் என மின்சார சபை குறிப்பிட்டுள்ளமை கவலைக்குரியது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டபோது அப்போதைய அரசாங்கம் தனது பெரும்பான்மையைப் பயன்படுத்தி அவரைப் பதவி நீக்கியது. இலங்கை மின்சார சபை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தைக் கருத்திற் கொள்ளாமல் செயற்படுவது தவறான தொரு எடுத்துக்காட்டாகும்.

பாராளுமன்றத்தில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பொய்யுரைக்காமல் கணக்காய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பதிலளிக்குமாறு மின்சாரத்துறை அமைச்சரிடம் வலியுறுத்துகிறோம்.

உரிய தரவுகளை மீளாய்வு செய்து பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு 20 சதவீதத்தால் மின்கட்டணத்தைக் குறைத்துள்ளது. மின்பாவனையாளர்களின் பக்கம் இருந்து ஆணைக்குழு எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

மின்கட்டணக் குறைப்பை முறையாக அமுல்படுத்த வேண்டும். சட்டத்தின் பிரகாரமே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்கட்டணத்தைக் குறைத்துள்ளது. ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு எதிராக மின்சார சபை செயற்பட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நாட்டுப் பிரஜைகளுக்கு உண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## யாழ்.குருநகரில்...

னர்.

அதேவேளை 49 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு தறப்பால் வழங்கப்பட்டுள்ளதுடன் சேத விபரங்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (ந-7,332)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## இராணுவச்...

ஊடகப்பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது.

இராணுவச் சிப்பாய் மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி நடுக்குடா கடற்கரைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் - நொச்சிக்குளம் பகுதியில் 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இருந்தநிலையில், விசாரணைகளுக்காகச் சென்ற சந்தேகநபர்கள் மூவர் உள்ளடங்கலாக 4 பேர் மீது நீதிமன்றத்துக்கு முன்பாக வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார்விசேட தேடுதல்களை மேற்கொண்ட நிலையில் சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் பேசாலை - நடுக்குடாப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடையவர் எனக் கருதப்படும் மேற்படி இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டு பேசாலை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதன் அடிப்படையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் மற்றும் பேசாலைப்பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,285)

## குற்...

அகற்ற வேண்டுமென பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மன்னார் நீதிமன்றுக்கு முன்பாக இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடனும் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு தமிழர் பகுதியில் இராணுவ முகாம் இருப்பது அமைதியான சூழலுக்குப் பங்கம் விளைவிக்கும் என தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் சிவில் அமைப்புகளும் பல தடவை எடுத்துக்கூறியிருந்தன.

எனினும் தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் இராணுவ முகாம்களை வைத்திருப்பதுடன் படையினருக்கான நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

எனவே வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் குற்றச் செயல்களைக் குறைத்து அமைதியான சூழலை ஏற்படுத்துவதற்கு இங்குள்ள படை முகாம்களை உடனடியாக அகற்ற வேண்டும் எனப் பொது அமைப்புகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.19
சீட்டிழுப்பு இலக்கம் 5721
F 2 8 9 5 7 4
அத சம்பத F 9 5 7 4
சீட்டிழுப்பு இலக்கம் 296
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1751
N 11 16 20 53 N
Double Chance 23322

மெகா பவர்
திகதி 19/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2069
K 08 15 17 21 80

லக்கி 7 VIP
திகதி 2025.01.19
சீட்டிழுப்பு இலக்கம் 547
R 5 1 4 0 4 2 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3963
சீட்டிழுப்பு திகதி 19.01.2025
M 05 30 45 80
M

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.19
சீட்டிழுப்பு இலக்கம் 1030
துலாம் 14 22 44 60 துலாம்
55577 46

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.01.2025 வெற்றி வாரம் 429
0 1 9 1 3 8 3
95444
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,433,892.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2695
சீட்டிழுப்பு திகதி 2025.01.19 தினம் ஞாயிற்றுக்கிழமை
36 38 51 65 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,858,983.20

சனிதா
திகதி 19.01.2025 வெற்றி வாரம் 4856
62 68 69 73 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,340,875.20
92078

சசிரி
604
19.01.2025 ஞாயிற்றுக்கிழமை
34 38 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4407
சீட்டிழுப்பு திகதி 19.01.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
09 25 47 61 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,470,092.80
115150

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 04 11 33 67 74
1871
19.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.562,395,642.80

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2521
சீட்டிழுப்பு திகதி: 2025.01.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,108,754.40
27 33 44 62 Z
713964
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்...

கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பதில் நீதவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், வல்வெட்டித்துறை, தீருவில் பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் சந்திரபாலன் (வயது- 45) என்ற குடும்பஸ்தர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை (18) கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது அவர் நெஞ்சுக் குத்து ஏற்பட்டதாக தெரிவித்ததை தொடர்ந்து ஊரணி வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்துள்ளதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு சென்ற பருத்தித்துறை பதில் நீதவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து முழுமையான பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ந-7,60)

## பாடசாலை...

பட்டுள்ளதாகக் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெறவிருந்த தவணைப் பரீட்சைகளை எதிர்வரும் சனிக்கிழமை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பலத்த மழையுடன் கூடிய வானிலையால் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)


இப்பொழுது விற்பனையில்...

புத்தம் புதிய வெளியீடு 2025

புதிய பாடத்திட்டத்திற்கமைவான,
திரு. T. A. பெற்றிக்குறே
(BA, PGDE (Merit), MEd (Edu & Mgt) (Art Resource Person)
ஆசிரியரின் ஆக்கத்தில்...

# சித்திரக்கலை
இலகு வழிகாட்டி

தரம் 10,11
வர்ணப்படங்களுடன், அலகு ரீதியான இலகுவான குறிப்புகளும், மாதிரி பயிற்சி வினாக்களும் உள்ளடங்கியது



தரம் 6, 7, 8, 9
வர்ணப்படங்களுடன், அலகு ரீதியான இலகுவான குறிப்புகள்

மொத்தமாகவும், தபால் மூலம் தனிப்பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

Rs. 550 Rs. 850

UNILANKA'S PUBLICATION,
No. 326, Sea Street, Colombo 11.
Tel : 011 4014438 Hotline : 077 6258778
Whatsapp : 077 6258778 / 0777220324
(C-2067)



## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (758)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
076 800 6500
48/= ~~80/=~~



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2090) 076 825 7716 (ஆகாஸ்)



## தரம் 6 - O/L

ஆங்கில, தமிழ் மொழி மூலம்

GROUP CLASSES

NEWTON
NALLUR
077 792 3653 (3064)


## தவறிவிட்டது

யாழ்.வண். பெருமாள் ஆலய சூழலில் கறுப்பு நிறப் பை ஒன்று தவறிவிட்டது. அதில் ந.அமிர்தநாதன் (611751729V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுதிப்பத்திரம் என்பன உள்ளிருந்தது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

077 760 6101 (3069)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2089)


# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 01 - 1940



மறைவு 19 - 01 - 2025

## மயில்வாகனம் கதிர்காமநாதன்
(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் யாழ். செயலகம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கதிர்காமநாதன் நேற்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பாளின் அன்புக் கணவரும் சியாமா, மகிந்தன், சுகந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தர்மினி, சத்தியபாமா ஆகியோரின் மாமனாரும் சுகணா, தமிழினியன், குயிலினியன், தனுசிகா, திவாகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, மகேஷ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், யோகராசா மற்றும் புஸ்பராணி, தில்லைநாயகி, ஜெயரட்ணம், டிபாலதாஸ் காலஞ்சென்ற வசந்தி ஆகியோரின் மைத்துனரும் பரமேஸ்வரி, தர்மகுலசிங்கம், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், பத்மா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20.01.2025 திங்கட்கிழமை பி.ப 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கண்டி வீதி,
(தபால் கட்டைச் சந்திக்கு அருகில்)
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(3070)

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 20.11.1957

மறைவு 21.12.2024

கடந்த 21.12.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

அமரர்

## திருமதி செல்வராசா ஜெயதேவி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 20.01.2025 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் திருநாவலூர் மருதந்தெணி மகாமாரி அம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப் பிரசுரங்கள், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-2087)

திருநாவலூர்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.